இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2023





நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 54 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 15 – திங்கள்கிழமை 02 அக்டோபர் 2023 – சென்னை 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 54: Thiruvalluvar Year - 2054 - Purattasi 15 - Monday 02 October 2023 - Chennai 10 Pages ₹ 5.00




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துரை வழங்கினார்!

## ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது! 'இந்தியா' கூட்டணிதான் ஆட்சி அமைக்கும்! - புதுவை உள்ளிட்ட

# 40 தொகுதிகளிலும் வென்றிட திட்டமிட்டு உழையுங்கள்!

### மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துரை!

**சென்னை, அக்.02-**

**மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை காணொலி மூலம் உரையாற்றுகையில், ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது என்றும் 'இந்தியா' கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்றும் - புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வென்றிட திட்டமிட்டு உழையுங்கள் என்றும் கருத்துரை வழங்கினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (1.10.2023) மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் பெருமக்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் ஆகியோர் பங்கேற்ற கலந்தாலோசனைக் கூட்டம், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

அதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பொது முக்கியத்துவம் வாய்ந்த சில கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு, விரைந்து செயல்பட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். அதனால்தான் உடனடியாகக் காணொலி மூலமாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இந்தியா கூட்டணியில் வலுவான கட்சிகள் இடம் பெற்றுள்ளன!**

நம்மை எதிர்நோக்கி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதியிலும் நாம் வெற்றி பெற வேண்டும். தமிழ்நாட்டில் அடைவது போன்ற வெற்றியை இந்தியா முழுமைக்கும் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.

அகில இந்தியக் கட்சிகளும் பல்வேறு மாநிலங்களை ஆளும் கட்சிகளும் - வலுவான மாநிலக் கட்சிகளும் - இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. பாரதீய ஜனதா கட்சி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க முடியாது; இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டு விட்டது. எனவே, இந்த நேரத்தில் நமது பொறுப்பும் கடமையும் அதிகமாகி உள்ளது.

> **"அகில இந்தியக் கட்சிகளும் பல்வேறு மாநிலங்களை ஆளும் கட்சிகளும் - வலுவான மாநிலக் கட்சிகளும் - இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. பாரதீய ஜனதா கட்சி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க முடியாது; இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டு விட்டது. எனவே, இந்த நேரத்தில் நமது பொறுப்பும் கடமையும் அதிகமாகி உள்ளது."**

**சிறப்பு மாநாடுபோல் நடைபெற்ற பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள்!**

நாடாளுமன்றத் தேர்தல் பணியை கடந்த ஆறு மாதத்துக்கு முன்பே நாம் தொடங்கினோம். நமது வெற்றிக்கு அடித்தளமாக விளங்கக்கூடிய வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை நியமித்தோம். இதுவரையில் அவர்களுக்கான மூன்று பயிற்சிபாசறைக் கூட்டங்கள், தேர்தல் சிறப்பு மாநாடுகளைப் போல நடந்துள்ளன. அடுத்ததாக வடக்கு மண்டல பயிற்சி பாசறைக் கூட்டம் திருவண்ணாமலையிலும், சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டமும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி பாசறைக் கூட்டங்களில் நாம் எடுத்துச் சொன்னதைச் செயல்படுத்தினாலே போதும். முழுமையான வெற்றியை நாம் அடைந்து விடலாம்.

**மக்கள் சரியாக இருக்கிறார்கள் திட்டமிட்டு உழைத்தால் வெற்றி உறுதி!**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட 39 தொகுதிகளை வென்றோம் என்றால், நடக்க இருக்கும் தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்றாக வேண்டும். எந்தவொரு தனி மனிதரையும் விட இயக்கமும் - இயக்கம் அடைய வேண்டிய வெற்றியும்தான் முக்கியம்.

மக்கள் நன்றாக இருக்கிறார்கள். அதனை வாக்குகளாக மாற்றுவதற்கு உழையுங்கள். உழைப்பும் செயல்பாடும் தான் வெற்றியைப் பெற்றுத் தரும். திட்டமிட்டு உழையுங்கள். தி.மு.க. கூட்டணி அனைத்துத் தொகுதியிலும் வெற்றி பெற உழையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு,

# புகழ்பெற்ற 'தி எகனாமிஸ்ட்' ஆங்கில இதழ் பாராட்டு!

### 'கவர்ச்சி அரசியல் செய்வதை விட பட்டறிவின் அடிப்படையில் சிக்கல்களை அணுகுகிறார்!' - எனப் புகழாரம்!

உலகின் தலைசிறந்த பத்திரிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படும் "தி எகனாமிஸ்ட்" 177 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. அரசியல், வணிகம், தொழில்நுட்பம் என பல்வேறு தளங்களில் கட்டுரைகள் வெளியிடும் "தி எகனாமிஸ்ட்" இதழுக்கு உலகம் முழுக்க 16 லட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்கள் இருக்கின்றார்கள்.

இப்படி பல பெருமைகளைக் கொண்ட "தி எகனாமிஸ்ட்" இதழில், ஒரு முழுப் பக்க அளவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறித்தும் - அவரது அரசின் செயல்பாடுகள் குறித்து புகழ்ந்தும் கட்டுரை வெளியாகியுள்ளது.

"Meet the Dravidan stalin" என்னும் தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரை, "இந்தியாவின் தலைவரான பிரதமர் மோடி அளிக்காத செயல்திறனை வழங்கும் தமிழ்நாட்டின் தலைவர்" என மு.க.ஸ்டாலின் அவர்களை புகழ்ந்து உள்ளது.



Tamil Nadu's leader offers something India's does not: competence

The Economist

What M.K. Stalin lacks in charisma he compensates for with pragmatism

சோவியத் ஒன்றியத்தின் தலைவராக இருந்த ஜோசப் ஸ்டாலின் இறந்த அதே வாரத்தில் பிறந்த தனது மகனுக்கு அவரது நினைவாக ஸ்டாலின் என கலைஞர் பெயர் சூட்டியது குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மு.க.ஸ்டாலின் கவர்ச்சி அரசியல் செய்வதை விட, பட்டறிவின் அடிப்படையில் பொருத்தமான முறையில் சிக்கல்களை அணுகுவதாக அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.







நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோ மற்றும் பிரதமர் மோடி அரசின் பொருளாதாரக் கொள்கைகளுடன் மாற்றுக் கருத்துக் கொண்ட ரகுராம் ராஜன் உள்ளிட்ட ஐந்து பொருளாதார அறிஞர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழு; மாநிலத்தின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டதைக் குறிப்பிட்டுள்ள "தி எகனாமிஸ்ட்", இந்த நியமனங்கள் பிரதமர் மோடிக்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலி னுக்கும் இடையேயான வேறுபாட்டை காட்டும் வகையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் பிரதமர் மோடியின் அதிகாரப் பரவலாக்கும் முயற்சிகளுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் முகமாக மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளதாகவும், எதிர்வரும் 2024 நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பிரதமர் மோடியை எதிர்த்துக் களம் இறங்கப் போவது யார் என்ற கவனம் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, பினராயி விஜயன் ஆகியோர் மீது விழுந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990-ஆம் ஆண்டுகளில் சென்னையின் மேயராகப் பதவியேற்றதிலிருந்தே மக்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை மு.க.ஸ்டாலின் பிடிக்கத் தொடங்கிவிட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கொரோனா தொடர்பாக அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சி பிரதிநிதிகளின் குழுவில் முந்தைய அ.தி.மு.க. அரசின் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கரை இணைப்பதன் மூலம் - ஒரு சிறந்த நடைமுறையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கி உள்ளதாகவும் "தி எகனாமிஸ்ட்" புகழாரம் சூட்டியுள்ளது.